சுருக்கம்

பணியமைப்பு – கருவூலக் கணக்குத் துறை – திரு.R.ஈஸ்வர், இளநிலை உதவியாளர், திருச்சி மாவட்டக் கருவூல அலகு – கருணை அடிப்படையில் 02.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது .

**நிதி (கருவூலக் கணக்கு – 2)த் துறை**

**அரசாணை (3ப) எண்.54**

**நாள். 21.09. 2023**
**சோபகிருது, புரட்டாசி –4,**
**திருவள்ளுவர் ஆண்டு –2054,**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொ.(ம).வே.வா.(க்யூ1)த் துறை, நாள் 23.01.2020.
2. திருச்சி மாவட்ட கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.**எண்.16800/2020/**ஆ**2, நாள்.02.12.2021.
3. கருவூல கணக்கு ஆணையரின் கடித ந.க.எண். 32423/2022/சி1, நாள்.23.01.2023.

*******

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கருவூலக் கணக்கு ஆணையரின் கடிதத்தில், திருச்சி மாவட்டக் கருவூல அலகில் சார்நிலைக் கருவூலம், திருச்சி அலுவலகத்தில் கூடுதல் சார்நிலைக் கருவூல அலுவலராக பணிபுரிந்து வந்த திரு.**D**.ராஜேஷ் என்பவர் **06.07.2020** அன்று பணியிலிருக்கும் போது பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மகனுமான திரு.R.ஈஸ்வர் என்பவர் கருணை அடிப்படையில் திருச்சி மாவட்டக் கருவூல அலகில் பணியமர்த்தப்பட்டு, 02.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பில் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், பணியேற்பு செய்த நாளில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட வயதினை நிறைவு செய்துள்ளார் என்றும், இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், தனியரின் குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை என்பதற்கான சான்றிதழினை அளித்துள்ளார் என்றும், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான தகுதியை தனியர் பெற்றுள்ளார் என்றும், தெரிவித்து அவரது பணியினை 02.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

2. மேலே, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல் முறை ஆணையில் திரு.R.ஈஸ்வர், (காலஞ்சென்ற திரு.**D**.ராஜேஷ், கூடுதல் சார்நிலைக் கருவூல அலுவலர், திருச்சி மாவட்டக் கருவூல அலகு என்பவரின் வாரிசுதாரர் மற்றும் மகன்) என்பவர் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ல் பிரிவு 17–ன் உட்பிரிவு (1)–ன்படி தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார். மேலும் அச்செயல்முறை **ஆணை**யின்படி தனியர்,